பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

09 07 2024 **TUESDAY** **6.45 AM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புட்டினுடன் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

2. காவிரி டெல்டா மாவட்டங்ளில் வேளாண் சார்ந்த தொழில்களை அதிக அளவில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாநில அரசு தெரிவித்துள்ளது.

3. விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4. தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கை நிலைநாட்ட மாநில அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

5. இந்தியா – தென்னாப்பிரிக்க இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி சென்னையில் இன்று நடைபெறுகிறது.

*--- இனி விரிவான செய்திகள் ----*

**<<<<<>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி, ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புட்டினுடன் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

ரஷ்யா சென்றுள்ள அவர், அந்நாட்டு அதிபர் திரு புட்டினுடன் இந்தியா மற்றும் ரஷ்யா இடையேயான 22-வது ஆண்டு உச்சிமாநாட்டில் பங்கேற்கவுள்ளார்.

இதில், பாதுகாப்பு, வர்த்தகம், எரிசக்தி கல்வி, கலாச்சாரம் உள்ளிட்டவற்றில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் பேச்சு நடத்தவுள்ளனர்.

மண்டல மற்றும் உலகளாவிய விவகாரங்கள் குறித்தும் அவர்கள் பேச்சு நடத்தவுள்ளனர்.

பிரிக்ஸ், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு, ஜி20, கிழக்கு ஆசிய உச்சிமாநாடு மற்றும் ஐநா போன்றவற்றில் இணைந்து செயல்படுவது குறித்தும் இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தவுள்ளனர்.

முன்னதாக நேற்று இரவு பிரதமருக்கு ரஷ்ய அதிபர் விருந்தளித்தார்.

தமது பயணத்தின் அடுத்த கட்டமாக பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று ஆஸ்திரியா செல்லவுள்ளார்.

<<<<<>>>>>

காவிரி டெல்டா மாவட்டங்களில் வேளாண் சார்ந்த தொழில்களை அதிக அளவில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில தொழில்துறை அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா கூறியுள்ளார்.

ஈச்சங்கோட்டை பகுதியில் பாமாயில் பழக்குலை கொள்முதல் நிலையத்தை திறந்துவைத்தபின் பேசிய அவர், பாமாயில் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

*(சவுண்ட் பைட் - டி ஆர் பி ராஜா – செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதியில் நாளை இடைத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அதற்கான ஏற்பாடுகள் தீவிரம் அடைந்துள்ளன.

பதற்றமான வாக்குச் சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் – விழுப்புரம் சுரேஷ் – 48 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

வேலூர் மாவட்டத்தில் மத்திய அரசின் சம்பூர்ணத்தா அபியான் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் கே. வி குப்பம் பகுதியில், செப்டம்பர் மாத இறுதிக்குள் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 800 விவசாயிகளுக்கு மண்வள அட்டை முழுவதுமாக வழங்கப்படும் என மாவட்ட வேளாண் இணை இயக்குனர் திரு சோமு எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - சோமு – 51 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

மூளையை பாதிக்கும் அமீபா நோய் குறித்து முன்னெச்சரிக்கையுடன் செயல்படுமாறு பொதுமக்களுக்கு தமிழக பொது சுகாதரத் துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அனைத்து மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கும் தமிழக பொது சுகாதாரத்துறை இயக்குநர் செல்வவிநாயகம் கடிதம் எழுதியுள்ளார்.

அதில் தேங்கி இருக்கும் நீரில் குளிப்பதைப் பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நீர்நிலைகள், குளங்கள், ஏரிகளில் சுகாதாரம் பேணப்படுவதை உள்ளாட்சி அமைப்புகள் உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அமீபிக் மெனிங்கோ என்செபாலிடிஸ் என்னும் மூளையை பாதிக்கும் நோய் தொற்று தொடர்பான உயிரிழப்புகள் கேரளாவில் நிகழ்ந்ததை கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட மாநில அரசு விரைந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பிஜேபி மாநிலத் தலைவர் திரு அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சென்னை நகரில் கூலிப் படையினர் அதிகரித்துள்ளதாக கூறினார்.

காவல்துறையின் அடிப்படைக் கட்டமைப்பு வலுப்படுத்தப்படவில்லை என்றும் குற்றம் நிகழ்ந்த பின்பு தான் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

குற்றம் நிகழ்வதற்கு முன்பு அவற்றை தடுப்பதற்கான நடவடிக்கைகளை வலுப்படுத்த வேண்டும் என்று அவர் கூறினார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கை சிபிஐ-யிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் திரு அண்ணாமலை வலியுறுத்தினார்.

<<<<<>>>>>

இம்மாதம் ஒன்றாம் தேதி முதல் மத்திய அரசின் மூன்று குற்றவியல் சட்டங்கள் நடைமுறைக்கு வந்துள்ளன.

விபத்து ஏற்படுத்திவிட்டு செல்லும் வாகன ஓட்டிகளை கடுமையாக தண்டிக்க இந்த புதிய சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளதாக நாமக்கல்லை சேர்ந்த வழக்கறிஞர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*சவுண்ட் பைட் - வழக்கறிஞர் தீரன் - 30 செகண்ட்ஸ்*

<<<<<>>>>>

தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், மாலை அல்லது இரவு நேரங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று அதிகாலை பரவலாக மழை பெய்தது.

<<<<<>>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்காவில் தென்கிழக்கு டெக்சாஸ் பகுதியில் வீசிய பெரில் புயல் காரணமாக 12 பேர் உயிரிழந்தனர். 20 லட்சத்துக்கும் அதிகமான வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

=====================

பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் கட்சிக்கு பெரும்பான்மை கிடைக்காததை அடுத்து, பிரதமர் கேப்ரியல் அட்டலின் ராஜினாமாவை ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் நிராகரித்தார்.

==================

இந்தியாவுக்கான பிரான்ஸ் தூதர் திரு தெய்ரி மத்தோ, மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியாவைச் சந்தித்து, விளையாட்டுத் துறையில் இருநாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து பேச்சு நடத்தினார்.

=====================

குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் எல்இடி விளக்குகள் உற்பத்திக்கு, உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகைத் திட்டப் பலன்களைப் பெற ஜூலை 15-ம் தேதி முதல் 90 நாட்களுக்கு விண்ணப்பிக்கலாம் என மத்திய தொழில் மற்றும் வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

=======================================

திருவள்ளூரில் பொது விநியோகத் திட்ட ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு பிரபு சங்கர் தலைமையில் நடைபெற்றது.

=================== தனசேகரன்

கடல் சீற்றங்களின் போது பொதுமக்களை மீட்பது தொடர்பாக காவலர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கான சிறப்பு பயிற்சியை கன்னியாகுமரியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு சுந்தரவதனம் தொடங்கி வைத்தார்.

============================

திருநெல்வேலி மேட்டுப்பாளையம் சிறப்பு வாராந்திர ரயில் கல்லிடைக்குறிச்சி ரயில் நிலையத்தில் நிறுத்தம் இருந்தும் நிற்காமல் சென்ற விவகாரம் தொடர்பாக இரண்டு லோகோ பைலெட்டுகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

=====================

நாமக்கல்லில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 64 பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி உமா வழங்கினார்.

==========================

தஞ்சை மாவட்டத்தில் 6 பழங்கால ஐம்பொன் சிலைகளைப் பதுக்கி வைத்திருந்த மூன்று பேரை சிலைக் கடத்தல் தடுப்புக் காவல்துறையினர் கைது செய்தனர்.

**<<<<<>>>>>**

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

இந்தியா – தென்னாப்பிரிக்க இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

சென்னையில் இரவு ஏழு மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

மூன்று போட்டிகளை கொண்ட தொடரில் முதல் போட்டியில் தென்னாப்பிரிக்கா வெற்றிபெற்றது.

இரண்டாவது ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டது.

**<<<<<>>>>>**